**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,**
**ARIYALUR**

| **MCOP . No. 7/2024** | | **R. W.–2** |
|---|---|---|
| Name | : | **பாக்கியராஜ்** |
| Father Name | : | **செல்வராசு** |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |
| Date | : | **08.04.2026** |

(சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

கடந்த 19.09.2023 ஆம் தேதி நான் தூத்துக்குடியிலிருந்து அரியலூர் ultra tech ஆலைக்கு பல்க்கர் லாரியை ஓட்டிவந்தேன். அந்த லாரியின் பதிவு எண் தற்போது நினைவில்லை. வீ.கைக்காட்டி நால்ரோட்டில் வேகத்தடையில் பொறுமையாக சென்று கொண்டிருந்தபோது இருச்சக்கர வாகனத்தில் வந்த ஒருவர் திடீரென வலது புறமாக திருப்பிவிட்டார். உடனே நான் லாரியை நிறுத்திவிட்டேன். லாரியின் இடது புறம் அந்த இருச்சக்கர வாகனத்தில் மோதிவிட்டது. நான் கீழே இறங்கி சென்று இருச்சக்கர வாகனத்தில் வந்தவரை தூக்க முயன்றபோது அவர் மது அருந்தியிருக்கும் வாடை வந்தது. அவர் தலைக்கவசம் அணியவில்லை. அப்போது அருகில் இருந்த போலீசார் வந்து போக்குவரத்தை சரிசெய்து காயம்பட்டவரை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். விபத்திற்கு இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்தவர் தான் காரணம்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்த இடத்தின் இருபுறமும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். நான் Regular ஆக ultra tech நிறுவனத்திற்கு தான் வண்டி ஓட்டிவந்தேன். விபத்து நடந்த இடத்தில் வேகத்தை குறைக்கும் வகையில் சிறுசிறு

வேகத்தடைகள் சுமார் 20 தொடர்ச்சியாக உள்ளது என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றேன் என்றால் சரிதான். விபத்து வேகத்தடையின் தெற்கு முனையில் நடைபெற்றது என்றால் சரிதான். நான் வேகத்தடையில் நுழைந்துவிட்டால் எதிர்தாற்போல் வரும் வாகனத்திற்கு இடம் இருக்காது என்றால் சரிதான். எதிர்தாற்போல் வாகனம் வந்தால் நான் கீழ்புறம் ரோட்டைவிட்டு இறங்கி தான் செல்லவேண்டும் என்றால் சரிதான்.

நான் ஓட்டிச்சென்ற வாகனம் முன்னால் ஓட்டுநர் இருக்கையுடன் கூடிய cabin–னும் அதன் இணைப்பாக tanker–ரும் இருக்கும் என்றால் சரிதான். எதிர்தாற்போல் வண்டி வருவதை பார்த்துவிட்டு நான் தான் எவ்வித சமிஞ்சையும் செய்யாமல் திடீரென வாகனத்தை திருப்பி விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. எனது கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் அதிலிருந்து தப்பிப்பதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்தவர் மது போதையில் இருந்ததாகவும், தலைக்கவசம் அணியவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சம்மந்தமான குற்ற வழக்கு என் மீது ஜெயங்கொண்டம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை.

சாட்சியின் கையொப்பம்: ஒம்./– பாக்கியராஜ்

நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சியை விசாரித்து தட்டச்சரால் அடிக்கப்பட்டு சாட்சியிடம் வாக்குமூலத்தை படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி ஒப்புதல் அளிக்கப்பட்டு என்னால் சரிபார்த்து கையெழுத்திடப்பட்டது.

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.04.08 16:56:10 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
அரியலூர்.